தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தலைவர்கள் வாழ்த்து!

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று முகாம் அலுவலகத்தில், கழகப் பொருளாளரும், மக்களவை கழகக் குழுத் தலைவருமான டி.ஆர். பாலு மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. ராசா ஆகியோர் பொங்கல் திருநாளையொட்டி சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, சட்டப்பேரவைத் தலைவர் மு. அப்பாவு அவர்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, திராவிடர் கழகத் தலைவர், ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் சந்தித்து, பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார். உடன், திராவிடர் கழக பொதுச் செயலாளர் வீ. அன்புராஜ் உள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான கு.செல்வப்பெருந்தகை சந்தித்து, பொங்கல் வாழ்த்துத் தெரிவித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன், முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் ஆகியோர் சந்தித்து, பொங்கல் வாழ்த்துப் பெற்றனர்.

தமிழர் திருநாளாம் பொங்கலை முன்னிட்டு

சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த் வாழ்த்து!

முதல்வருக்கு தொலைப்பேசி மூலம் தெரிவித்தார்!

சென்னை, ஜன.18– தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை 15.1.2026 அன்று தமிழர் திரு நாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு, சூப்பர் ஸ்டார் ரஜினி காந்த் அவர்கள் தொலைப்பேசி மூலம் தொடர்புகொண்டு பொங்கல் வாழ்த்து தெரிவித்துக்கொண்டார்.

உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டி: துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.1.2026 அன்று மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் உலகப் புகழ்பெற்ற பாலமேடு கிராமத்தில் நடைபெற்ற ஜல்லிக்கட்டுப் போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்து, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் சிறந்த காளைகளின் உரிமையாளர்களுக்கு பரிசுகளை வழங்கினார். இந்நிகழ்வில் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.வெங்கடேசன், மு.பூமிநாதன், மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன் குமார், காவல் கண்காணிப்பாளர் கா.ப.அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் க.அன்பழகன், நடிகர் சூரி உள்பட மாடுபிடி வீரர்கள், காளைகளின் உரிமையாளர்கள், வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.